Athuvambadi to provide transport facilities between Athuvambadi and Madras. No representation was received from the Panchayat Board, Athimoor.

(*b*) The Regional Transport Authority, North Arcot did not consider it necessary to open a new route from Athuvambadi to Madras but decided to vary the route 'Wallajah Road to Arni Road' as 'Wallajah Road to Athuvambadi via Arni' to provide transport facilities to Athuvambadi.

SRI S. M. ANNAMALAI : சர்க்காருடைய கொள்கை 25 சத விகிதம் பஸ்களை அதிகமாக்கவேண்டும் என்று இருந்தபோதிலும் கூட, இந்த மார்க்கத்தில் இதுவரையில் ஒரு பஸ் கூட அதிகரிக்கப் படவில்லை. அதற்குக் காரணம் என்ன? அது குறித்து சர்க்கார் பரிசீலனை செய்தார்களா?

THE HON. SRI V. RAMAIAH : ஒவ்வொரு மார்க்கத்திலும் எத்தனை பஸ்கள் தேவைப்படுகிறதோ, அதை பொது மக்களுடைய வசதிக்காக அதிகப்படுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய விருப்பம். இதையெல்லாம் தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டிய பொறுப்பு ஆர்.டி.ஏ.-வினுடையது. எங்கிருந்து கோரிக்கைகள் வருகின்றனவோ அவைகளையெல்லாம் முறையாக பரிசீலனை செய்து ஆர்.டி.ஏ. முடிவு எடுக்கிறார்கள். எப்பொழுதும் ஆர்.டி.ஏ. முடிவு எடுக்கும்பொழுது பொது மக்களுடைய வசதி, தேவை இவைகளை மனதில் வைத்துத்தான் முடிவு எடுக்கிறார்கள்.

SRI S. M. ANNAMALAI : இந்த மார்க்கத்திலுள்ள பொது மக்கள் மேலும் மேலும் பல மனுஜர்கள் அனுப்பியும் ஆர்.டி.ஏ. இரண்டு ரூட்களுக்குத்தான் சிபார்சு செய்திருக்கிறார்கள். வாலாஜா ரோடு-ஆரணி ரோடு மார்க்கத்து பஸ்ஸை ஆத்துவம் பாடிக்கு நீடிப்பது என்பது கைவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது. அதற்கு உண்மையான காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : வாலாஜா ரோடு-ஆரணி ரோடு பஸ்ஸை ஆத்துவம்பாடிக்கு நீடித்திருக்கிறார்கள் என்றுதான் நான் இப்பொழுது படித்த பதிலில் சொன்னேன். ஆகையால், பொது மக்களுடைய தேவையை மனதில் வைத்துத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டு வருகிறது.

Radio sets

* 207 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN :** கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஸ்களில் ரேடியோக்களை வைக்கக்கூடாதென்று சர்க்கார் உத்தரவிட்டுள்ளார்களா?

(இ) அப்படியானால், அதற்குக் காரணமென்ன?

THE HON. SR. V. RAMAIAH : (*a*) Yes, Sir.

28th January 1961]

(b) The ban was imposed to prevent accidents, as the music emanating from the radio sets installed in stage carriages diverts the attention of the drivers from driving, thereby giving occasion for accidents.

Sri V. K. Kothandaraman : சொந்தமான கார்களை வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்கள் குடும்பத்தினரோடோ அல்லது மற்றபடியோ போகக்கூடிய நேரத்தில் அந்தக் கார்களில் ரேடியோ வைக்க அனுமதிக்கப்படுகிறது அப்பொழுது மட்டும் ஆபத்து ஏற்படாதா? பார்வை கெட்டுப்போய் விடாதா? டிரைவருடைய கவனம் வேறு பக்கத்தில் திரும்பாதா? பஸ்களில் ரேடியோ வைத்தால்தான், அந்த டிரைவருடைய பார்வை கெட்டு போய் அவருடைய கவனம் வேறு பக்கத்தில் திரும்பிப் போய் விடும் என்று சர்க்கார் கருதுவதின் நோக்கம் என்ன?

The Hon. Sri V. Ramaiah : தனிப்பட்டவர்கள் சிறு வண்டிகளில் ரேடியோ வைத்துக்கொண்டு போவதற்கு நாம் எந்த விதமான தங்கு தடையும் விதிக்கவில்லை. காரணம் அவர்கள் ரேடியோவை அதிகப் பொறுப்போடு வைத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை. ஆனால், பெரிய பஸ்களில் பொது மக்கள் பிரயாணம் செய்யக்கூடிய நேரத்தில் இதை மிகவும் ஜாக்கிரதையாக நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. அதை அரசாங்கம் மிகவும் நுணுக்கமாக பார்க்க வேண்டும். பெரிய பஸ்களில் 60, 65 பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்கள். அவர்களுடைய உயிரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அரசாங்கம் அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என் ஆசை. இதுபற்றி எனக்கு ஆலோசனை கூறும் எஸ்.டி.ஏ. குழுவின் விருப்பமும் அதுதான்.

Sri V. K. Kothandaraman : கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவதை பொதுவாகப் பார்த்தாலும்கூட, அடிக்கடி கார்கள், வான்கள்தான் லாரிகளிலும், பஸ்களிலும் மோதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, கார் டிரைவர்களுடைய பொறுப்புதான் அதிகமாக இருக்கிறது. பஸ் டிரைவர்களுக்கு பொறுப்பு கிடையாது என்று கனம் அமைச்சர் நினைக்கிறார்களா?

The Hon. Sri V. Ramaiah : கனம் அங்கத்தினர் லாரி டிரைவர்களுக்கு பொறுப்பு அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கனம் அங்கத்தினர், கார் போய் பஸ்ஸில் மோதுவதாக குற்றம் சொல்லுகிறார்கள். ஆனல் எனக்கு வருகிற விவரம் பஸ்தான் காரில் போய் மோதி விபத்து ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. பஸ்களில் ரேடியோக்களை அமைப்பதுபற்றி நாங்கள் தீவிரமாக பரிசீலனை செய்திருக்கிறோம். ஒரு பக்கத்தில் பார்த்தால் நீண்ட பிரயாணம் செய்பவர்களுக்கு அது வசதியாக இருந்தாலும்கூட, ஆனல் சில சந்தர்ப்பங்களில் அதில் செல்லும் பிரயாணிகளுக்கு சில தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்துத்தான் பஸ்களில் ரேடியோ வைப்பதை ரத்து செய்திருக்கிறோம்.

[28th January 1961

Sri M. KALYANASUNDARAM : ரேடியோ வைத்ததன் விளைவாக பஸ்கள் விபத்துக்குள்ளான தகவல் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா? அப்படி இல்லையென்றால், பஸ்கள் ஓடும் சமயத்தில் வேண்டுமானால் ரேடியோக்களை வைக்கக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு பஸ்கள் நின்றுகொண்டிருக்கும்பொழுது ரேடியோக்கள் வைக்கலாம் என்ற அடிப்படையிலே ரேடியோ வைப்பதற்கு அனுமதி அளிக்கப்படுமா?

The Hon. Sri V. RAMAIAH : இந்த விபத்துகள் பற்றிய புள்ளி விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். பஸ்கள் ஓடும்போது ரேடியோ வைத்தால்தான் ஏதேனும் பிரயோசனமாக இருக்கும். நிற்கக்கூடிய நேரத்தில் ரேடியோவை முடுக்கிவிட்டால், அதை யார் கேட்பது என்று எனக்குப் புரியவில்லை. அடிக்கடி பஸ்கள் நிற்கக்கூடிய நேரத்தில் நான் பார்த்திருக்கிறேன். அங்கு பிரயாணிகள் போடுகிற சத்தமே போதும். அதோடுகூட ரேடியோ சத்தமும் சேர்ந்தால் அது பிரயாணிகளுக்கு அதிகமாக தொந்தரவு கொடுக்கும். ஆகையால் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுவதற்கு தயாராக இல்லை.

Sri P. G. MANICKAM : சர்க்காருடைய பஸ்களில் எத்தனை பஸ்களில் ரேடியோக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன?

The Hon. Sri V. RAMAIAH : எந்த பஸ்ஸிலும் ரேடியோ வைத்துக்கொள்ள முடியாது.

House-rent

*209 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have any proposal to bring a legislation to fix a ceiling on the income accrued from the letting of residential and non-residential buildings?

The Hon. Sri V. RAMAIAH : No, Sir.

Women village munsifs

*210 *Q.*—Sri S. RAMALINGA PADAYACHI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராம மணியக்காரர் (Village Munisif) வேலை பெண்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

(இ) இல்லையென்றால், காரணமென்ன?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) At present women are eligible for appointment as village headmen if they possess the prescribed qualification for the post.